# நல்லூர், யாழ்ப்பாணக் கல்விக்கோட்டம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2015

| தரம் : 08 | புவியியல்<br>பெயர் / சுட்டெண் : .................................................. | நேரம் :<br>2.00 மணித்தியாலம் |
| --- | --- | --- |

### பகுதி - I
பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

01. சூரியனில் இருந்து ஐந்தாவது இடத்தில் அமைந்துள்ள கோள்.
1) புதன் 2) புவி 3) வியாழன் 4) வெள்ளி

02. டிசம்பர் 21ம் திகதி சூரியன் உச்சம் கொடுக்கும் கோடு.
1) மத்தியகோடு 2) மகரக்கோடு 3) கடகக்கோடு 4) அந்தாட்டிக்கோடு

03. போலன், கைபர் கணவாய் காணப்படுவது.
1) இந்தியா 2) நேபாளம் 3) பாகிஸ்தான் 4) பூட்டான்

04. வெப்பம் படிப்படியாக அதிகரிக்கும், மரங்களில் தளிர்கள், பூக்கள் என்பன தோன்றத் தொடங்கும் காலம்.
1) மாரிகாலம் 2) இளவேனில் காலம்
3) கோடைகாலம் 4) இலையுதிர்காலம்

05. வளிக்கோளத்தில் காணப்படும் நைதரசனின் அளவு.
1) 70% 2) 78.03% 3) 72.03% 4) 79.02%

06. நேபாளத்தின் தலைநகரம்.
1) இஸ்லாமாபாத் 2) புதுடெல்லி 3) காத்மண்டு 4) திம்பு

07. "சுந்தர்பான்ஸ்" சேற்றுநிலம் காணப்படும் நாடு.
1) இந்தியா 2) இலங்கை 3) பங்களாதேஷ் 4) மாலைதீவு

08. இந்தியா குறைந்த வெப்பத்தைப் பெறும் காலம்.
1) டிசம்பர்-பெப்ரவரி 2) மார்ச் இறுதி முதல்-மே இறுதி வரை
3) யூன்-டிசம்பர் 4) ஒக்டோபர்-நவம்பர்

09. ஆசியாவில் அதிக மழை பெறும் நகரம்.
1) சீறாப்பூஞ்சி 2) வட்டவளை
3) இஸ்லாமாபாத் 4) மறிச்சுக்கட்டி

10. தென்னாசிய வலயத்தில் காடுகள் இல்லாத நாடு.
1) பூட்டான் 2) பாகிஸ்தான் 3) நேபாளம் 4) மாலைதீவு

11. சிங்களவர், தமிழர் இனத்தவர்கள் வாழும் தென்னாசிய நாடுகளின் தொகுதி
1) இலங்கை, இந்தியா 2) இலங்கை, மாலைதீவு
3) இலங்கை, பாகிஸ்தான் 4) மாலைதீவு, பாகிஸ்தான்



kalvi.lk

12. தொட்டுணரக் கூடிய கலாசாரப் பாரம்பரியமாக அமைவது.
1) இசை 2) நடனம் 3) செதுக்கல் 4) சமயம்

13. மாலைதீவின் முக்கிய பொருளாதார நடவடிக்கைளாக அமைவது.
1) சுற்றுலாக் கைத்தொழில் 2) விவசாயம் சார்ந்த கைத்தொழில்
3) இலத்திரனியல் கைத்தொழில் 4) மீன்பிடிக் கைத்தொழில்

14. புவியோட்டின் மீது காணப்படும் மிக உயர்ந்த மலைத்தொடர்
1) பீதுறுதாலகால மலைத்தொடர் 2) இமயமலைத்தொடர்
3) அந்தீஸ் மலைத்தொடர் 4) றொக்கி மலைத்தொடர்

15. இந்தியாவின் இமாலயப் பகுதியில் வாழும் பழங்குடி இனத்தவர்.
1) காசா குலத்தினர் 2) தரட் 3) புட்டியா 4) லெப்சா

16. "தங்கநார்" உற்பத்தி செய்யும் நாடுகளில் முக்கியம் பெறுவது.
1) பங்களாதேஷ் 2) பாகிஸ்தான் 3) இலங்கை 4) இந்தியா

17. தென்னாசியாவில் உள்ள நாடுகளில் இயற்கை வளம் குறைவாகக் காணப்படும் நாடு.
1) மாலைதீவு 2) இலங்கை 3) பாகிஸ்தான் 4) இந்தியா

18. பவளப் பாறைகளால் உண்டான தீவுக்கூட்டம்
1) சீசெல்ஸ் தீவுகள் 2) மாலைதீவுகள்
3) லட்சதீவுகள் 4) பிலிப்பைன்ஸ் தீவுகள்

19. மாலைதீவு வாசிகளின் முக்கிய பாரம்பரிய வாழ்வாதாரத் தொழில்.
1) மீன் பிடித்தல் 2) விவசாயம் செய்தல்
3) இரத்தினக்கல் அகழ்தல் 4)கைத்தறி நெசவுத்துணி உற்பத்தி செய்தல்

20. அண்மையில்ப் பாரிய இயற்கை அனர்த்தமான நிலநடுக்கத்திற்கு உட்பட்ட தென்னாசிய நாடுகளில் ஒன்று.
1) பங்களாதேஷ் 2) நேபாளம் 3) பூட்டான் 4) பாகிஸ்தான்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

**1 ஆம், 2 ஆம் வினா உட்பட, ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. 1) 2ம் தவணையில் புவியியல் பாடத்தில் நீர் மேற்கொண்ட கணிப்பீடுகள் 2 தருக? (2 புள்ளிகள்)

2) அக் கணிப்பீடுகள் மேற்கொண்ட பாட அலகுகளைக் குறிப்பிடுக?

3) அக் கணிப்பீட்டினை மேற்கொள்வதற்கு உமக்கு வழங்கப்பட்ட பொருட்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

4) அக் கணிப்பீட்டினை மேற்கொண்டதனால் நீர் பெற்றுக் கொண்ட நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

02. பின்வரும் இடங்களை உலகப்புற உருவப்படத்தில் குறித்துப் பெயரிடுக.
1) இந்தியா 2) நேபாளம் 3) இந்து நதி
4) யப்பான் 5) மத்தியதரைக் கடல் 6) இலங்கை
7) சீனா 8) பாக்கு நீரிணை

(1½ x 8=12 புள்ளிகள்)



kalvi.lk

03. 1) ஞாயிற்றுத் தொகுதி என்றால் என்ன?

2) ஞாயிற்றுத் தொகுதியுள் அடங்கும் அகக் கோள்கள் எவை, புறக் கோள்கள் எவை?

3) புவிக்கோளின் சிறப்பம்சங்கள் மூன்றினைக் குறிப்பிடுக?

04. 1) தென்னாசிய வலயத்தின் எல்லையினைக் குறிப்பிடுக?

2) பின்வரும் தென்னாசிய நாடுகளின் தலைநகரங்களைக் குறிப்பிடுக?
இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், இலங்கை

3) தென்னாசிய வலய நாடுகளின் காடுகளின் இயல்பைத் தீர்மானிக்கும் காரணிகள் 3 தருக?

05. 1) இந்தியாவின் கிராமங்களில் பயன்படுத்தப்படும் சக்தி வள மூலகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

2) இந்தியாவின் கிராமமக்கள் சக்தி வளங்களைப் பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் நான்கினைக் குறிப்பிடுக?

3) சக்தி வளங்களால் கிராமமக்கள் உச்சப் பயனைப் பெற்றுக்கொள்வதற்காக இந்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள வழிமுறைகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(2 + 4 + 6 =12 புள்ளிகள்)

06. 1) "தங்கநார்" எனக் குறிப்பிடப்படும் பயிர் எது?


2) தங்கநார் மூலம் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்கள் நான்கினைக் குறிப்பிடுக?

3) மாலைதீவின் சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் மூன்றினைக் குறிப்பிடுக?

(2 + 4 + 6 =12 புள்ளிகள்)



kalvi.lk



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457